விண்ணப்பம் வந்திருக்கிறது. நானும் அந்தத் தொல்லைக்கு ஆளாகியிருக்கிறேன். இன்று கூட்டம் அதிகமாக இருக்கிறது. எனவேதான் இன்றைக்கு ஒருவருக்கு ஒரு மணி நேரம் என்பதற்குப் பதிலாக அரை மணி நேரம் என்று குறைத்து, அனுமதிச் சீட்டுகள் வழங்க ஏற்பாடு செய்துள்ளேன். எல்லோருக்கும் கிடைக்கும்.

திரு. நா. சுந்தரராஜ் : அதற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது உங்களுக்குப் புரியவில்லை. இன்றைக்கு முக்கியமான நிகழ்ச்சி என்று பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

திரு. செ. சிவசாமி : ஏற்கனவே போட்ட கேள்விகளில் 500 கேள்விகளுக்குப் பதில்கள் தயாராக இருக்கின்றன என்று மதிப்பிற்குரிய தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்த 500 கேள்விகளுக்குப் பதில் கொடுக்கும் வகையில் ஒன்றிரண்டு நாட்கள் தனியாகக் கேள்வி பதிலுக்கே ஒதுக்கி கேள்விகளுக்குப் பதில் அளிக்க தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட முறை கிடையாது. அவை நடக்கிற வரை கேள்விகள் இணைக்கப்பட்டு பதில் அளிக்கப்படும். மற்ற வினாக்களும் பதில்களும் அச்சிட்டு அனுப்பி வைக்கப்படும்.

## 3. ஒழுங்குப் பிரச்சனை

ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெரியார் மாவட்டம் ஈரோடு பள்ளிப்பாளையம் காகித ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வதும் உண்ணாவிரதம் இருப்பதும் அதனால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர்:

திரு. க. சுப்பு

திரு. கு. ரமணி

திரு. ரா. வெங்கிடு சாமி வெகிங்டு

திரு. சி. பழனிமுத்து

திரு. மு. அம்பிகாபதி

இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

## ஒழுங்குப் பிரச்சனை

*திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த அவையில் கண்டனத் தீர்மானம் தரப்பட்டு அதற்கான முடிவான பதில்கள் தரப்படுகிற நேரத்தில் பலவிதமான பிரச்சினைகளுக்கு முடிவு தெரிவிக்கப்படும் என்ற அடிப்படையில் இதற்கு முன்னால் இப்படிப்பட்ட தீர்மானம் தரப்படுகிறபோது தாங்கள் பெரும் பாலும் அந்தத் தீர்மானங்களுக்கு அவசியம் இல்லை, இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிவிடலாம் என்று தெரிவித் தீர்கள். அவைத் தலைவர் அவ்வாறு தெரிவிக்கிறபோது அதை ஏற்றுக் கொள்ள வேண்டிய கடமை பெரும்பாலோருக்கு

[முற்பகல் 10-20]

ஏற்படுகிறது. எல்லோருக்குமே கூட ஏற்படுகிறது. ஆனால் இன்றைய தினம் முதலமைச்சர் பதில் சொல்லப் போகிறார். பள்ளிபாளையம் ஆலையைப்பற்றி நானே முதன் முதலிலே பேசும்போது சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு பேசிய திரு. உமாநாத் போன்றவர்களும் பேசியிருக்கிறார்கள். இன்றைக்கு முதலமைச்சர் பதில் சொல்ல இருக்கிறபோது, இன்றைய தினம் அந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வது தங்களுடைய மேன்மையான கருத்தோட்டத்திற்குப் பொருந்தி வருகிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எழுப்புகின்ற பிரச்சினை எனக்கும் தெரிகிறது, ஆனால் இதற்கு தனி முக்கியத்துவம் தரப்பட வேண்டுமென்றும் அது மிக அவசியமானது என்று சொன்னதாலேயும் அமைச்சர் அவர்களைக் கேட்டபொழுது பதில் தயாராக வைத்திருப்பதாகச் சொன்னதாலேயும், பல உறுப்பினர்கள் நாள் கடந்து விட்டது இதற்கு தனி கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று வற்புறுத் தியதாலும் தான் நான் அனுமதித்தேனே தவிர நீங்கள் சொல்கிற பிரச்சினையோடு பார்த்தால் இதை அனுமதிக்க வேண்டிய தில்லை. வேண்டுமானால் இதை நாளைக்கு எடுத்துக்கொள்ள லாம் என்றால் நான் அதற்கும் தயாராக இருக்கிறேன்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கேட்டுக் கொள்வதற்கு இணங்க இப்பிரச்சினையை நாளை மறு நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : நம்முடைய அண்டை மாநிலமான கேரள அரசு, மத்திய அரசு தொடர்பான பிரச்சினை பற்றி நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்வதாகத் தாங்கள் வாக்களித்திருக்கிறீர்கள். நேற்றைய தினம் வரவில்லை. நேற்றைய தினம் கேட்டதற்கு இன்றைக்கு எடுத்துக்கொள்ளப் படும் என்று சொன்னீர்கள். அது உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அமைச்சர் அவர்கள் இன்றைக்கே அறிக்கை தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். நேற்றுச் சொன்னீர்கள், இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் அவர்களுடைய பிரச்சினை என்னுடைய ஆய்விலே இருக்கிறது. அமைச்சர் தயார் என்றால் நானும் எடுத்துக்கொள்ளத் தயார். ஆனால் என்னிடம் அந்த அறிக்கை வரவில்லை. அந்த அறிக்கை வராமல் அதை அவையில் எடுத்துக் கொள்ள எப்படி நான் அனுமதிக்க முடியும்? அமைச்சர் தயார் என்றால் இப்போது கூட எடுத்துக்கொள்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. நான் எடுத்துக் கொள்ளத் தயார்.

திரு. க. அன்பழகன்: நான் அதை ஒத்துக்கொள்ள மாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அந்த முறையை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்கிறார்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.